මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

2024.11.02

මාධ්‍ය නිවේදන අංක : **PE/2024/52**

## පාර්ලිමේන්තු මැතිවරණය - 2024 නොවැම්බර් 14

### රාජ්‍ය හා පෞද්ගලික අංශයේ සේවයේ නියුතු අයවළුන්ට, ජාතික මැතිවරණවල දී වැටුප් හෝ පෞද්ගලික නිවාඩු අහිමිවීමකින් තොරව ස්වකීය ඡන්දය දීමට හැකිවනු පිණිස නිවාඩු ලබාදීම.

1981 අංක 1 දරන පාර්ලිමේන්තු මැතිවරණ පනතේ 122 වගන්තිය අනුව මැතිවරණයකදී නිවාඩු ලබා දීම සම්බන්ධයෙන් වන උපුටනය පහතින් දැක්වේ.

**"122 (1) මැතිවරණයක දී පෞද්ගලිකව ඡන්දය දීමට හිමිකම් ඇති වෙනත් යම් තැනැත්තෙකුගේ සේවායෝජකයෙකු වූ යම් තැනැත්තෙකු විසින්, ඒ වෙනත් තැනැත්තා ඡන්දය දීම පිණිස නිවාඩු දෙන ලෙස ලියවිල්ලකින් ඉල්ලීමක් කළ විට, ඒ මැතිවරණයේදී ඔහුට පෞද්ගලිකව ඡන්දය දීමට හැකි වනු පිණිස ප්‍රමාණවත් යයි ඒ තැනැත්තා විසින් සලකනු ලබන (පැය හතරකට නොඅඩු කාලයක) අඛණ්ඩ කාලයක් වැටුප් අහිමිවීමක් නොමැතිව ඒ වෙනත් තැනැත්තෙකුට ලියවිල්ලකින් දෙනු ලැබිය යුතුය.**

**(1 අ) සෑම සේවා යෝජකයෙකු විසින් ම-**

**(අ) (1) වන උපවගන්තිය යටතේ නිවාඩු ඉල්ලුම් කරන තැනැත්තන්ගේ නම්;**

**සහ**

**(ආ) එම උප වගන්තිය යටතේ නිවාඩු දෙනු ලබන තැනැත්තන්ගේ නම් සහ ඒ තැනැත්තන්ට ඒ නිවාඩු දෙනු ලැබුවේ කවර කාල පරිච්ඡේද සඳහා ද යන වග;**

**දැක්වෙන ප්‍රකාශයක් පිළියෙල කළ යුතු අතර එම ප්‍රකාශය සේවා ස්ථානයේ ප්‍රකටව පෙනෙන ලෙස ප්‍රදර්ශනය කිරීමට සැලැස්විය යුතුය.**

**(2) (1) වන උප වගන්තියෙහි හෝ (1අ) වන උප වගන්තියෙහි හෝ විධිවිධාන කඩ කරන හෝ ඒ අනුව ක්‍රියා කිරීම පැහැර හරින යම් තැනැත්තකු වරදක් කරන අතර මහේස්ත්‍රාත්වරයකු ඉදිරියෙහි පවත්වනු ලබන ලඝු නඩු විභාගයකින් පසු වරදකරු කරනු ලැබූ විට රුපියල් ලක්ෂ දෙකක් නොඉක්මවන දඩයකට හෝ එක් මාසයක් නොඉක්මවන කාලයක් සඳහා දෙයාකාරයෙන් එක් ආකාරයක බන්ධනාගාරගත කිරීමකට හෝ ඒ දඩය හා බන්ධනාගාරගත කිරීම යන දඬුවම් දෙකටම හෝ ඔහු යටත් විය යුතු ය. "**

**02.** ඉහත සඳහන් වගන්තියේ විධිවිධාන ප්‍රකාර ස්වකීය ඡන්දය දීමේ කාර්යය සඳහා නිවාඩු දෙන ලෙස ලියවිල්ලකින් ඉල්ලා සිටින සෑම සේවා නියුක්තිකයෙකුටම නිවාඩු ලබාදිය යුතුය. එසේ දෙනු ලබන නිවාඩු කාල සීමාව, අනියම් සේවා නියුක්තිකයන්ද ඇතුළුව සියලුම සේවා නියුක්තිකයන් සම්බන්ධයෙන් වැටුප් සහිත වන විශේෂ නිවාඩුවක් ලෙස සැලකිය යුතු අතර, එය සේවා නියුක්තිකයන්ගේ සාමාන්‍ය නිවාඩු හිමිකමෙන් පිටස්තර විය යුතුය.

**03.** ඉහත සඳහන් පාර්ලිමේන්තු මැතිවරණය 2024 නොවැම්බර් 14 වන බ්‍රහස්පතින්දා දින පෙරවරු 7.00 සිට පස්වරු 4.00 දක්වා පැවැත්වේ.

**04.** රාජ්‍ය අංශයේ, නිලධරයන්ගේ විශේෂ නිවාඩු පිළිබඳව ආයතන සංග්‍රහයේ XII වන පරිච්ඡේදයේ 12.3 ඡේදයේ දක්වා ඇති පරිදි, පාර්ලිමේන්තු මැතිවරණයක් සඳහා අවම කාලය පැය 4 ක් ලෙස ද ඡන්දය ප්‍රකාශ කිරීමට යාම පිණිස අවශ්‍යයැයි හැඟෙන අඛණ්ඩ කාලයක් සඳහා වැටුප් අඩු කිරීමක් නොමැතිව විශේෂ නිවාඩු ලබා දිය යුතු බව ද දක්වා ඇත.

**05.** එසේ වුවද පෞද්ගලික අංශයේ, සේවා නියුක්තීන්ට ලිඛිත නියමයකින් පැනවූ එවැනි විශේෂ නිවාඩු ලබා දීමේ ක්‍රම වේදයක් නොමැති හෙයින් බොහෝ සේවා යෝජකයන් තම සේවා නියුක්තීන්ට ඡන්දය පාවිච්චි කිරීම සඳහා වූ නිවාඩු ලබා නොදෙන බවට ලද පැමිණිලි සම්බන්ධයෙන් ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව, කම්කරු හා කම්කරු සබඳතා අමාත්‍යාංශයේ ලේකම්, කම්කරු කොමසාරිස් ජනරාල්, මැතිවරණ කොමසාරිස් ජනරාල් සමඟ මින් පෙර ජාතික මැතිවරණ අවස්ථාවේ පැවති සාකච්ඡාවේදී ඇති කර ගන්නා ලද එකඟතාව අනුව පෞද්ගලික අංශයේ සේවකයින්ට ජාතික මැතිවරණයකදී ඡන්දය පාවිච්චි කිරීමට යෑමට හා ඊමට නිවාඩු ලබා දීම සඳහා දුර හා කාලය අතර සම්බන්ධතාවක් සකස් කරන ලෙස මානව හිමිකම් කොමිෂන් සභාව විසින් කරන ලද දැන්වීම අනුව මතු සඳහන් වගුවට අනුකූලව පෞද්ගලික අංශයේ සේවය කරන්නා වූ සේවක සේවිකාවන්ට, සිය ඡන්දය ප්‍රකාශ කිරීම සඳහා වූ නිවාඩු ලබාදීමට අදාළ සේවා යෝජකයින් කටයුතු කිරීම සුදුසු බවට නිර්දේශ කරන ලදී.

**06.** සේවා නියුක්තිකයෙකුට මෙම කාර්යය සඳහා දෙනු ලබන නිවාඩු කාල සීමාව, එම සේවා නියුක්තිකයාගේ කාර්ය ස්ථානයේ සහ ඡන්ද පොළ අතර ඇති දුර ප්‍රමාණය මත සේවා යෝජකයා විසින් නිගමනය කළ යුතුය. මෙහිදී පහත හත් වන ඡේදයට යටත්ව පොදු ප්‍රවාහන සේවා භාවිතා කරන ලෙස සලකා ආයතන ප්‍රධානීන් විසින් නිවාඩු ලබා දීම සම්බන්ධයෙන් තීරණය ගත යුතුය.

| **ඡන්දය පාවිච්චි කිරීම සඳහා සේවා ස්ථානයේ සිට තම ඡන්ද පොළට යායුතු දුර ප්‍රමාණය** | **ලබා දිය යුතු අවම නිවාඩු කාල සීමාව** |
|---|---|
| කිලෝමීටර් 40 හෝ ඊට අඩු නම් | දින භාගයයි (1/2) |
| කිලෝමීටර් 40 ත් කිලෝමීටර් 100ත් අතර නම් | දින එකයි (1) |
| කිලෝමීටර් 100 ත් කිලෝමීටර් 150ත් අතර නම් | දින 1 1/2 යි |
| කිලෝමීටර් 150 ට වැඩි නම් | දින 2යි |

**07.** ඉහත සටහනින් යෝජනා කර ඇත්තේ ලබා දිය යුතු අවම කාලය වන අතර දිවයිනේ සමහර ඡන්දදායකයින්ට ඡන්ද පොළට යෑමට හා ඊමට දින තුනක් අවශ්‍ය වන අවස්ථා ද සැලකිය යුතු සංඛ්‍යාවක් තිබෙන හෙයින් අවස්ථාවෝචිතව දින තුනක් නිවාඩු දීමට සිදු වන බවද සැලකිල්ලට ගත යුතු වේ. එහෙත් සේවා යෝජකයා විසින් ඡන්ද විමසීම් ප්‍රදේශය දක්වා (ඡන්ද පොළට ප්‍රවාහන පහසුකම් ලබා නොදිය යුතුයි) විශේෂ ප්‍රවාහන පහසුකම් ලබා දීම හා අධිවේගී මාර්ග භාවිතය තුළින් කාලය කළමනාකරණය කර ගන්නා විට පැය 4 සීමාවට යටත්ව අවම නිවාඩු කාලය ගණනය කිරීමේදී අවධානය යොමු කළ හැක.

**08** මෙහිදී, සේවා නියුක්තීන් විසින් ලිඛිත ඉල්ලීමක් මඟින් නිවාඩු ඉල්ලුම් කළ යුතු අතර, සෑම සේවා යෝජකයකු විසින්ම විශේෂ නිවාඩු ඉල්ලුම් කළ තැනැත්තන් හා නිවාඩු ප්‍රදානය කරන කාලසීමාව දැක්වෙන ලේඛනයක් පිළියෙළ කර එය, සේවා ස්ථානයේ ප්‍රදර්ශනය කළ යුතු ද වේ.

**09.** නීතිය අනුව නිවාඩු ලබා ගැනීම පිළිබඳව මෙයට පෙර පැවති ඡන්ද විමසීම්වලදී සේවා නියුක්තිකයින්ගෙන් පැමිණිලි ලැබී ඇති හෙයින් මෙම පාර්ලිමේන්තු මැතිවරණයේදී ඡන්දය දීමට හිමිකම් ඇති ස්වකීය සේවා නියුක්තිකයන්ට, නීත්‍යානුකූලව හිමිවන එම නිවාඩුව ලබාදෙන ලෙස රාජ්‍ය හා පෞද්ගලික යන දෙපාර්ශවයේ සියලුම සේවා යෝජකයන්ගෙන් ඉල්ලා සිටිමි.

**10.** මානව හිමිකම් කොමිෂන් සභාවේ මාර්ගෝපදේශ සැලකිල්ලට ගෙන කම්කරු හා වෘත්තීය සමිති සබඳතා අමාත්‍යාංශයේ ලේකම්, කම්කරු කොමසාරිස් ජනරාල් හා මැතිවරණ කොමිෂන් සභාව මින් පෙර ඡන්ද විමසීම්වලදී එළඹි එකඟතාවට අනුව සැකසූ පෙර සඳහන් නිර්දේශවලට අනුකූලතාව දක්වමින් ස්වකීය ආයතනයේ සේවා නියුක්තීන්ට ඡන්දය දීමට යෑමට හා ඊමට ප්‍රමාණවත් නිවාඩු ලබා දෙන ලෙස සියලුම සේවායෝජකයන් වෙතින් කාරුණිකව ඉල්ලා සිටිනු ලැබේ.

**11.** මේ සම්බන්ධයෙන් සියලුම සේවායෝජකයන්ගෙන් ලැබෙන සහයෝගය පිළිබඳව අතිශයින් කෘතඥ වෙමි.

සමන් ශ්‍රී රත්නායක
මැතිවරණ කොමසාරිස් ජනරාල්

මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: : PE/2024/52** **2024.11.02**

# பாராளுமன்றத் தேர்தல் - 2024.11.14

**அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு தேசிய தேர்தல்களின் போது, சம்பளம் மற்றும் சொந்த விடுமுறைகள் என்பவற்றை இழக்காமல் தத்தமது வாக்கினை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்**

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் கீழான தேர்தலின் போது விடுமுறை வழங்குதல் தொடர்பான ஏற்பாடுகளின் பிரித்தெடுப்புகை கீழே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

"122 (1) தேர்தலொன்றில் நேரடியாக வாக்களிப்பதற்காக உரித்துடைய வேறெவரேனும் ஆளின் தொழில் தருநராகவிருப்பவரான எவரேனும் ஆள், அத்தகைய வேறு ஆளினால் அதற்கென எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், வேறு ஆள் நேரடியாக வாக்களிப்பதை இயலச் செய்வதற்குப் போதியதென தொழில் தருநராகிய அவ்வாள் கருதக்கூடிய தொடர்ச்சியான அத்தகைய காலத்திற்கு (நான்கு மணித்தியாலங்களுக்குக் குறையாததாயிருத்தல் வேண்டும்.) எழுத்திலான சம்பளக் குறைப்பற்ற லீவை, அத்தகைய வேறு ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

"(1அ) தொழில் தருநர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைத் தருகின்ற கூற்றொன்றைத் தயாரித்தல் வேண்டும்.-

(அ) ஓராம் உட்பிரிவின் கீழ் லீவுக்கு விண்ணப்பிக்கின்ற ஆட்களின் பெயர்கள் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் கீழ் லீவு வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்களும் அத்தகைய ஆட்களுக்கு அத்தகைய லீவு எக்காலப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டதோ அக்காலப் பகுதிகளும்,

அத்துடன் அத்தகைய கூற்றைத் தொழிலிடத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கச் செய்வித்தல் வேண்டும்." அத்துடன்,

(2) ஓராம் உட்பிரிவின் அல்லது (1அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ்வேற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாதவொரு காலத்திற்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்."

02. மேற்குறிப்பிட்ட பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், தத்தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குமாறு எழுத்து மூலம் விண்ணப்பித்திருக்கும் அனைத்து ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்குவதற்கு மற்றும், அவ்வாறு வழங்கப்படும் விடுமுறைக்கான காலஎல்லை, அமய ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறை எனக் கருத்திற் கொள்ளல் வேண்டுமென்பதுடன், இது ஊழியர்களின் சாதாரண விடுமுறை உரிமைக்குப் புறம்பானதாக இருத்தல் வேண்டும்.

03. மேற்கூறப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 7.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை இடம்பெறும்.

04. அரச நிறுவனங்களின் அலுவலர்களுடைய விசேட விடுமுறை தொடர்பாக தாபன விதிக்கோவை XII ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு, பாராளுமன்றத் தேர்தலுக்காக ஆகக் குறைந்தது நான்கு மணித்தியாலங்கள் என்ற வகையில், வாக்களிப்பதற்காகச் செல்வதற்குத் தேவையெனக் கருதுகின்ற தொடர்ச்சியான காலத்திற்கு சம்பளம் குறைக்கப்படாமல் விசேட விடுமுறை வழங்கப்படல் வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

05. எனினும், தனியார் துறை ஊழியர்களுக்கு எழுத்து மூலமான பணிப்புரை ஒன்றினால், அவ்வாறான விசேட விடுமுறை வழங்கும் முறையொன்று இல்லாத காரணத்தினால், அநேகமான தொழில் தருநர்கள், வாக்களிப்பதற்காக விடுமுறை வழங்குவதில்லையென கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் மற்றும் தொழிற் தொடர்புகள் அமைச்சுச் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம் ஆகியோருடன் தேர்தல் ஆணையாளர் நாயகம் அவர்களால் கடந்த தேர்தல்களின் போது நடாத்தப்பட்ட கலந்தாலோசனைகளின் போது மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம், தனியார் துறை ஊழியர்களுக்கு தேர்தல்களின் போது, வாக்களிப்பதற்காக போய் வருவதற்கு, விடுமுறை வழங்குவது தொடர்பில் தூரம் மற்றும் காலம் என்பவற்றினை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிவித்தல் அடங்கிய அட்டவணையின்படி, தனியார் துறையினருக்கு தமது வாக்கை அளிப்பதற்கு விடுமுறை வழங்கும் வகையில் தொழில் தருநர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டது.

06. ஊழியரொருவருக்கு இச்செயற்பாட்டிற்காக வழங்கப்படுகின்ற விடுமுறைக் காலஎல்லையானது, ஊழியரின் கடமை நிலையம் மற்றும் வாக்களிப்பு நிலையத்தின் அமைவிடம் ஆகியவற்றிற்கிடையிலான தூரத்தை அடிப்படையாக வைத்து, தொழில் தருநர் தீர்மானம் மேற்கொள்ளல் வேண்டும். இதன் போது கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம், பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்தும் வகையில் விடுமுறை வழங்குதல் பற்றி தொழில் தருநர்கள் தீர்மானித்தல் வேண்டும்.

| **வாக்களிப்பதற்காக கடமை நிலையத்திலிருந்து வாக்களிப்பு நிலையம் வரை செல்ல வேண்டிய தூரம்** | **வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த விடுமுறைக் காலம்** |
|---|---|
| 40 கிலோ மீட்டருக்குக் குறைவாக இருப்பின் | அரை நாள் (1/2) |
| 40 கிலோ மீட்டருக்கும் 100 கிலோ மீட்டருக்கும் இடைப்பட்ட தூரம் | ஒரு நாள் (01) |
| 100 கிலோ மீட்டருக்கும் 150 கிலோ மீட்டருக்கும் இடைப்பட்ட தூரம் | 1½ நாள் |
| 150 கிலோ மீட்டருக்குக் கூடுதலாக இருப்பின் | 2 நாள் |

07. மேலே உள்ள அட்டவணையின்படி, விடுமுறை வழங்கக்கூடிய ஆகக்குறைந்த காலஎல்லையாக உள்ளதுடன், நாட்டின் ஒரு சில வாக்காளர்களுக்கு தமது வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வதற்கும், வருவதற்கும் சுமார் மூன்று நாட்கள் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. அவ்வாறு சந்தர்ப்பத்திற்கேற்ப மூன்று நாட்கள் விடுமுறை வழங்க வேண்டுமென்பதையும் கவனத்திற் கொள்ளவும். எனினும் தொழில் தருநரால் வாக்கெடுப்பு நிலையப் பிரதேசம் வரையான (வாக்களிப்பு நிலையத்திற்கான போக்குவரத்து வசதிகள் வழங்கலாகாது) விசேட போக்குவரத்து வசதிகளின் காலஎல்லையைக் கணிக்கும் போது அதிவேக நெடுஞ்சாலையைப் பாவிப்பதன் மூலம் காலத்தை மீதப்படுத்தி, 4 மணித்தியால விடுமுறையை கணித்துக் கொள்வதில் கவனம் செலுத்தலாம்.

08. இதன் போது, ஊழியர்கள், விடுமுறைக்காக எழுத்து மூலமான வேண்டுகோள் விடுக்க வேண்டுமென்பதுடன், அனைத்து தொழில் தருநர்களும் விசேட விடுமுறைக்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் விடுமுறை வழங்கும் காலம் என்பவற்றைக் காட்டும் அட்டவணையொன்றைத் தயாரித்து அதனை சேவை நிலையத்தில் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

09. சட்டத்தின் படி, விடுமுறை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களின் போது ஊழியர்களின் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமையுள்ள அனைத்து ஊழியர்களுக்கும், சட்டப்படி உரித்தான விடுமுறையை வழங்குதல் வேண்டுமென அரச மற்றும் தனியார் துறை அனைத்துத் தொழில்நருநர்களிடமும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

10. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களைக் கருத்திற் கொண்டு, தொழில் மற்றும் தொழிற்சங்கத் தொடர்புகள் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம் மற்றும் தேர்தல் ஆணைக்குழு என்பன இதற்கு முன்னைய தேர்தல்களின் போது மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம், தயாரிக்கப்பட்ட முன்னர் குறிப்பிட்ட சிபாரிசுகளின்படி, தமது நிறுவனத்தின் ஊழியர்கள் வாக்களிப்பதற்காக சென்று வருவதற்குப் போதியளவு விடுமுறையை வழங்குமாறு அனைத்து தொழில் தருநர்களிடமும் தயவாய்க் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

11. இது விடயமாக அனைத்து தொழில் தருநர்களிடமிருந்தும் கிடைக்கப் பெறுகின்ற ஒத்துழைப்புக்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம

(+94)112868441-42-43 (+94)112868426 info@elections.gov.lk www.elections.gov.lk Election Commission of Sri Lanka SriLankaElectionCommission elecomsl